### கழகக் கொடியேற்றி – நலத்திட்ட உதவிகள் வழங்கி ஜூன் 3–ல்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## கழக ஆதிதிராவிடர் நலக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!



சென்னை, மே 27 -

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்று முன்தினம் (25.05.2026) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம் தலைமையில், இணைச் செயலாளர்கள் புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி. இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, துணைச் செயலாளர்கள் பா.துரைசாமி, மு. பொன்தோஸ், மு.பரமானந்தம், சி.தசரதன், மாரியப்பன் கென்னடி, முன்னாள் எம்.எல்.ஏ., கொ. ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளினை மாநிலம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது குறித்து உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

**தீர்மானங்கள்**

1. ஜூன்3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவினையொட்டி, ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வார்டுகளில் கழக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்குவதோடு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டுமென இக்குழு தீர்மானிக்கிறது.

2. நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைப் பொதுத்தேர்தலில், தி.மு. கழகம் மீதும், கழகத் தலைவர் அவர்கள் மீதும் நம்பிக்கை வைத்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்த 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

3. 2026 சட்டமன்றத் தேர்தலில், கொள்கை உறுதியோடு மதச்சார்பின்மை சக்திகளை ஒன்றிணைத்து 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை' உருவாக்கி, தேர்தல் களத்தில் நம்மையெல்லாம் வழிநடத்தி, முதன்மை தொண்டராய் ஓய்வில்லாமல் உழைத்து, 73 சட்டமன்றத் தொகுதிகளில் நம் கழகக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற முதன்மை காரணமாக விளங்கிய நம் கழகத் தலைவர் அவர்களுக்கும் தமிழ்நாடு முழுவதும் சூறாவளி தேர்தல் பிரச்சாரம் சுற்றுப்பயணம் செய்து 73 தொகுதிகளில் வெற்றிக்கு வழிவகுத்த - கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

4. தற்போது "ஆதிதிராவிர் நலக்குழு"வினை பெயர் மாற்றம் செய்து "சமகநீதிக் குழு" என்று பெயர் மாற்றம் செய்து அறிவித்திட வேண்டுமென கழகத் தலைவர் அவர்களிடம் இக்கூட்டம் கோரிக்கை வைக்கிறது.

5. எதிர்வரும் காலத்தில் ஆதிதிராவிடர் நலக்குழுவின் செயல்பாட்டினை மேலும் வலுவாக்கிட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் என அனைத்து நிர்வாகிகளையும் நியமனம் செய்யும் அதிகாரம் மாநில ஆதிதிராவிடர் நலக்குழுவுக்கு வழங்கிட வேண்டுமென கழகத் தலைவர் அவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

6. நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலும் தி.மு.க.வினரின் உழைப்பினால் ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களை பெற்ற காங்கிரஸ் ஒரு நன்றி உணர்வு கிஞ்சித்தும் இல்லாமல் ஒரே இரவில் அணி மாறிச் சென்ற சொந்த உழைப்பில் ஒருநாளும் வெற்றி பெற முடியாமல், நம்பியவர்களுக்கெல்லாம் துரோகமிழைக்கும் அறமில்லாத காங்கிரஸ் கட்சிக்கு இந்தக் கூட்டம் தனது கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தஞ்சை வடக்கு மாவட்டம்,

# கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் சு.க.முத்துசெல்வம் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரை!

தஞ்சாவூர், மே 27 -

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றியக் கழக செயற்குழுக் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கும்பகோணம் மேற்கு ஒன்றியம் தி.மு.க. செயற்குழு கூட்டம் ஆரியப்படைவீடு ஊராட்சி சமத்துவபுரம் திருமண மண்டபத்தில் ஒன்றிய அவைத் தலைவர் யு.எஸ்.ஆர்.லோகநாதன் தலைமையில் ஒருமனதாக நடைபெற்றது. கூட்டத்தில் சுவாமிமலை பேரூர் செயலாளர் எஸ்.எம்.எஸ்.பாலசுப்ரமணியன். மாவட்ட பிரதிநிதிகள் மணிவாசகம், அன்பழகன், குணாளன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.கே.முத்துசெல்வம் சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் பேரூர்க் கழக நிர்வாகிகள், வார்டு மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணியினர் கலந்து கொண்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில் நம் குடந்தை மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட கும்பகோணம், பாபநாசம் சட்டமன்ற தொகுதிகளில் கழக மற்றும் கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்காக ஓய்வின்றி கடுமையான தேர்தல் பணியாற்றிய ஒன்றிய, பேரூர் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,

கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தின் உடன் பிறப்புகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், கழக மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த பொதுமக்கள் அனைவருக்கும் குடந்தை மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் இக்கூட்டத்தின் வாயிலாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியாவில் பல பிரதமர்களை உருவாக்கி இந்திய ஒன்றியத்தின் வளர்ச்சிக்காகவும். வாழ்நாள் காலம் முழுவதும் தமிழ்நாட்டு மக்களுக்காகவும் தமிழுக்காகவும் ஓயாமல் உழைத்து வங்க கடலோரம் ஒய்வெடுக்கும் தமிழ் மக்களின் பிதாமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 ஆம் ஆண்டு பிறந்தநாளை கொண்டாட உள்ளோம். வருடா வருடம் கொண்டாடுவதை போல் இந்த வருடமும் ஒன்றிய, பேரூர் மற்றும் கிளை கழகங்களில் கழக இருவர்ண கொடியேற்றி கழக பாடல்களையும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர். கழகத் தலைவர் ஆகியோரது பேச்சுகளை ஒலிப்பரப்பியும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் ஜூன் மாதம் முழுவதும் ஆதரவற்ற முதியோர் இல்லம் ஆதரவற்ற சிறுவர்கள் இல்லங்களில் அறுஞ்சுவை உணவு வழங்கியும். அரசு ஆரம்பசுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவ பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்பாக கொண்ட ஒன்றிய,பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறோம்.

2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக பணியாற்றிட மக்கள் வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். நம் கழகம் பார்க்காத வெற்றியும் இல்லை, தோல்வியும் இல்லை.


வெற்றிபெற்ற போதெல்லாம் மக்களுக்கு ஓடி ஓடி மக்கள் நலத்திட்டங்களை வழங்கி 'தொண்டாற்றினோம், தோல்வியடைந்த போதெல்லாம் இன்னும் பொதுமக்களுக்க என்ன தேவை என்பதை அறிந்து கொண்டு மீண்டும் கழக ஆட்சி வந்தவுடன் மக்கள் எதிர்பார்க்கும் நலத்திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்துகிறோம். மாண்புமிகு கழகத் தலைவர் அவர்கள் கூறியதை போல் "நமக்கே உரிய போர்க்குணத்துடன் மக்கள் நலனுக்காகவும் மாநில உரிமைக்காகவும் நம் பயணத்தை எப்போதும் போல் தொடர்வோம்!" எனவே தஞ்சை வடக்கு மாவட்ட கழகத் உடன்பிறப்புகள் மனம் தரளாமல் எப்போதும் போல் மக்களை சந்தித்து, மக்கள் தொண்டாற்றி தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்கள் பணி செய்யும் என்பதை மக்களுக்கு புரிய வைக்கும் வகையில் நம் பணி இன்னும் தீவிரமாக இருக்க வேண்டும். என்பதை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு கும்ப கோணம் மேற்கு ஒன்றியக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 43–வது வார்டுக்குட்பட்ட ஜமாத் தலைவர் முகமது இக்பால் அவர்களின் இல்ல நிகழ்ச்சியில் கழக மாநில இலக்கிய அணி புரவலரும் வார்டு மாமன்ற உறுப்பினருமான ந.செந்தில் குடும்பத்தினரோடு கலந்து கொண்டு வாழ்த்தினார்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!




### இனிமேலாவது வீரவசனம் பேசாமல்

# மாற்றத்தைக் கொடுங்கள் CM சார்!

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
முன்னாள் அமைச்சர்



Dear CM Vijay Sir

போதும் சார்! தமிழ்நாடு முழுவதும் பிஞ்சு குழந்தைகளின் ஓலங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறது. அதற்கான காரணத்தை கண்டறியவும் மிருக மனிதர்களை ஒடுக்கவும் தங்களுக்கான நேரம் போதும் என்றே தோன்றுகிறது சார். தயவுசெய்து ஆக்ஷனில் இறங்குங்கள் சார்!

'உங்களின் ஹீரோயிசத்தைப் பார்த்துதான் உங்களுக்கு ஓட்டுப் போட்டோம்' என்கிறார்கள் மக்கள். இறந்த குழந்தைகளை நினைத்து மனம் வெதும்பும் நேரத்தில், அப்பாவி மக்கள் பேசும் இதுபோன்ற வார்த்தைகளாலும் வேதனை ஏற்படுகிறது. அவர்களுக்கு எப்படி சொல்லி புரியவைப்பது என்றே தெரியவில்லை.

வாழ்வும் அரசியலும் என்பது ஒரு ஹீரோ Intro பாட்டு, ஒரு குத்துப்பாட்டு, ஒரு செண்டிமெண்ட் பாட்டு கிடையாது! வாழ்வும் அரசியலும் என்பது ரவுடிகளை எதிர்த்து 5 சண்டை காட்சிகளை Shoot செய்வது கிடையாது! வாழ்வும் அரசியலும் என்பது துப்பாக்கி படம் போல சுட்டுக்கொண்டே இருப்பது கிடையாது! நிஜ வாழ்க்கையில் காலருக்குள் இருந்து சிகரெட்டை எடுக்க முடியாது! இது அப்பாவி மக்களுக்கு தெரியுமோ தெரியாதோ!

ஆனால் உங்களுக்கு நன்றாகவே தெரியும் CM Sir. நன்றாகவே தெரிந்திருந்தும் தங்களின் தேர்தல் பிரச்சாரம் முழுவதும் வீரவசனம் பேசுனீர்கள். திரையில் தோன்றும் விஜயை போலவே பிரச்சாரத்திலும் மக்களை ஏமாற்றுனீர்கள். அதன் பலனாக மக்கள் இப்போது கேள்வி கேட்கிறார்கள். அறியாமையால் கேள்வி கேட்கிறார்கள் என்று எண்ணிவிடாதீர்கள். அவர்களின் கேள்வி உங்களுக்கானது என்பதை மறந்துவிடாதீர்கள்.

உடனடியாக நிஜ ஆக்ஷனில் இறங்குங்கள். அல்லது வாயை திறந்து பேசுங்கள். தனது தங்கை நலமாக வாழ வேண்டும் என ரவுடிகளை வேட்டையாடிய திருப்பாச்சியை போல நீங்கள் மாற வேண்டாம். Real Lifeஇல் அப்படி மாறவும் முடியாது சார். உண்மையில் குழந்தைகளுக்கான அன்புள்ள மாமாவாக மாறுங்கள் சார். உங்களின் பக்கம் நின்று சொன்னால் 'அந்தக் குழந்தைகள் எல்லாரும் உங்களுக்காக வாக்குச் சேகரித்தவர்கள்' என்பதை மறவாதீர்கள் சி.எம். சார்.

குழந்தைகளின் ஓலம் ஒருபக்கம் என்றால் மின்வெட்டு மக்களை தூக்கமிழக்கச் செய்கிறது. இப்படியே சென்றால் தொழில் நிறுவனங்கள் எப்படி தமிழ்நாட்டை நம்புவார்கள் சார்? முதலில் மக்கள் எப்படி உங்களை நம்புவார்கள்?

**ஆட்சி என்றால் அரசு இயந்திரம் என்ற ஒன்று உள்ளது என்பதை கட்சிக்காரர்களுக்கு சொல்லிக்கொடுங்கள். தன்னோடு இருந்தவர்கள் எல்லாம் MLA ஆகிவிட்டார்கள், அமைச்சர் ஆகிவிட்டார்கள் எனும் ஆதங்கத்தில் தங்கள் கட்சிக்காரர்கள் எல்லாம் நேரடியாக ஆய்வுப்பணிக்கு சென்று விட்டார்கள். அதன் உச்சமாக இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் அவர்கள் (பஜ்ரங்தள் கொடியுடன் Profile Photo வைத்திருந்தாரே அவர்தான்) 'கட்சிக்காரர்களை உடனே ஆய்வு செய்ய சொல்லுங்க...' என உத்தரவிட்டுள்ளார். ஆகா... போறப்போக்கைப் பார்த்தால் ஆய்வுப்பணிக்கு செல்லும் கட்சிக்காரர்களுக்கு அலவன்சும் கொடுப்பார் போல!**


CM சார் தங்களை கிண்டல் செய்கிறேன் என நினைத்து விடாதீர்கள். உள்ளதை உள்ளபடியே சொல்கிறேன். இவையெல்லாம் தங்களுக்கும் நிச்சயமாக தெரிந்திருக்கும். ஆனால் ஏன் இப்படி மௌனியாக உள்ளீர்கள்?

CM விஜய் சார் 'மாற்றத்தைத் தருகிறேன்' என்று சொல்லித்தான் ஆட்சிக்கு வந்தீர்கள். மக்களும் உங்களை நம்பியுள்ளார்கள். தி.மு.க. சட்டைப்பையில் இருந்தவர்களையும் (காங்கிரஸ்!) எடுத்துக்கொண்டீர்கள் அல்லவா! மக்களின் நம்பிக்கையையும் தி.மு.க. சட்டைப்பையில் இருந்த காங்கிரஸ்காரர்களையும் வைத்துக்கொண்டு ஆட்சி அமைத்துள்ளீர்கள் அல்லவா! ஏதாவது மாற்றத்தை கொடுங்கள் சார். இனிமேலாவது வீரவசனம் பேசாமல் ஏதாவது செய்யுங்கள் ப்ளீஸ்!

### ஆ.இராசா எம்.பி. – எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ. – அருண் நேரு எம்.பி. பங்கேற்பு!

# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிவிப்பு!



பெரம்பலூர், மே 27 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் வருகின்ற 30.05.2026 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் பெரம்பலூர் பாலக்கரை அருகில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் அ.நடராஜன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி, அரியலூர் மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.எஸ். சிவசங்கர் எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

அதுசமயம் மாநில மாவட்ட, கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்

2. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.